### இந்தியாவைக் காக்கின்ற பணியில்

# தி.மு.கழகம் எப்போதும் முன்வரிசையில் நிற்கும்!

## ‘தேர்தல் – 2024, மீளும் மக்கள் ஆட்சி’ நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**சென்னை,செப்.23-**

**சென்னை, தி.நகர், சர் பிட்டி தியாகராயர் அரங்கத்தில், `தேர்தல்-2024, மீளும் `மக்கள்' ஆட்சி' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

இன்றைக்கு இந்தியா இந்தியாவாக இருப்பதற்கு காரணமாக அமைந்த, 2024- நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை, பல கோணங்களில் ஆய்வு செய்து, எழுதப்பட்டிருக்கும், ‘தேர்தல்-2024 மீளும் `மக்கள்' ஆட்சி', என்ற புத்தகத்தை வெளியிடுவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்துள்ள, ஆழி பதிப்பகத்தின் பதிப்பாளர், ஆழி செந்தில்நாதன் அவர்களுக்கும், தொகுப்பாசிரியர் அருண் பிரசாத் அவர்களுக்கும், எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மீளும் மக்கள் ஆட்சி!**

இந்தப் புத்தகத்தின் தலைப்பில், ‘மீளும் மக்கள் ஆட்சி’ என்று ஒரு வரி இருக்கிறது. அதில் ‘மக்கள்’ என்ற வார்த்தையை மட்டும், தனியாக ஹைற-லைட் பண்ணி இருக்கிறார்கள்.

உண்மையான மக்கள் ஆட்சி என்றால், என்ன? என்பதற்கான அர்த்தத்தைத்தான், 2024-மக்களவைத் தேர்தல் உணர்த்தி இருப்பதைத்தான், அப்படிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை வெளியிட, என்னை அழைத்து இருக்கிறார்கள். கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் அதற்காக என்னை அழைக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். நானும் ஒரு பதிப்பாளர். `முரசொலி'யில் கடந்த இரண்டு வருடங்களாக கடைசிப் பக்கம் `பாசறைப் பக்கம்' என்ற பெயரில் தொடர்ந்து கட்டுரைகள் வந்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டுரைகளையெல்லாம் தொகுத்து புத்தகங்களாக்கி, முத்தமிழறிஞர் என்ற பதிப்பகத்தைத் தொடங்கி, இரண்டு வருடங்களாக நாங்களும் பல புத்தகங்களை வெளியிட்டு கொண்டிருக்கிறோம். அந்த உரிமையோடு என்னை அழைத்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

**எனக்கும் சிறு பங்கு**

ஆளூர் ஷாநவாஸ் அவர்கள் பேசும்போது சொன்னார், ஆழி.செந்தில்நாதன் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். எப்படி அவர்களெல்லாம் பிராண்ட் பண்ணி விடுகிறார்கள் என்று. `200 ரூபாய் உ.பி' என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால், காசே இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். கண்டிப்பாக உங்களுக்கு வரும். இந்தப் புத்தகத்தின் விலை 200 ரூபாய். அதுமட்டுமில்லாமல், என்னை அழைத்ததற்கு, எனக்கும் சிறு பங்கு இருக்கிறது என்று நம்புகிறேன். கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கட்டளையை ஏற்று, கடந்த மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்துக்காக, தமிழ்நாடு - புதுச்சேரி முழுவதும், பயணம் செய்தேன். மக்களைப் போய் சந்தித்தேன்.

மொத்தம் 22 நாட்கள் - 9 ஆயிரம் கிலோ மீட்டர், பயணம் செய்து, 125 பிரச்சாரக் கூட்டங்களில், மக்களைச் சந்தித்து வாக்குக் கேட்டிருக்கிறேன். தேர்தல் பிரச்சாரக் களத்தில் நான் 2 முக்கியமான விஷயங்களை உணர்ந்தேன்.

ஒன்று, கழக அரசின் திட்டங்களுக்கான ஆதரவு நிலை. மகளிருக்கான விடியல் பயணம் - புதுமைப் பெண் - முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம் - கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, இப்படிப் பல்வேறு திட்டங்களுக்கு மிகப்பெரிய ஆதரவு. குறிப்பாக, மகளிரிடம் நம் கழக அரசிற்கும் நம் முதலமைச்சருக்கும் இருந்த மிகப்பெரிய வரவேற்பு.

**மக்களின் கோபம்**

இரண்டாவதாக நான் பார்த்த விஷயம், பாசிஸ்ட்டுகளுக்கு எதிரான மக்களின் உண்மையான, நியாயமான கோபம். குறிப்பாக, மதவாதம் - ஒரே நாடு- ஒரே மொழி- ஒரே மதம்- ஒரே உணவு என்று சொல்கின்ற, பா.ஜ.க.வின் வெறுப்புப் பிரச்சாரம், நிதி உரிமை உள்ளிட்ட மாநில உரிமைகளைப் பறிக்கின்ற போக்கு, இதற்கு எதிரான மாபெரும் மக்களின் கோபத்தைப் பிரச்சாரக் களத்தில் உணர்ந்தேன்.

அந்த அடித்தளத்தில்தான், 2024 தேர்தல் முடிவுகள் வந்திருக்கின்றன. அதைத்தான் இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் தெளிவாக விளக்கி இருக்கின்றன. இதில் முக்கியமான ஒரு கட்டுரை இடம்பெற்று இருக்கிறது. அதுவும் நம் முதலமைச்சர் அவர்களின் கட்டுரை. புத்தகத்தின் முதல் கட்டுரை.

பா.ஜ.க.வின் 10 வருட பாசிசப் போக்கையும், அதற்கு இந்தியா கூட்டணியும் - மக்களும் எப்படி கடிவாளம் போட்டார்கள் என்பதை, நம் முதலமைச்சர் அவர்கள் 360 டிகிரியில் அந்தக் கட்டுரையில் அலசியுள்ளார்கள்.

அந்தக் கட்டுரையில், முதலமைச்சர் அவர்கள் எழுதியிருப்பது போல, தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, மோடியின் நடை, உடை, பாவனைகள், எல்லாம் மாறிவிட்டன. மோடியின் நடை, உடை, பாவனைகள்தான் மாறியிருக்கின்றதே தவிர, மோடியின் பாசிச சிந்தனைகள் இன்னும் மாறவே இல்லை. அதை நம்மால், மாற்றவும் முடியாது.

**சரியான பாடம்**

தேர்தலில் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்த பிறகும், ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்டத்தைச் செயல்படுத்தத் துடிக்கிறார்கள். அதற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் கொடுத்து இருக்கிறது. ஆனால், அதை நாம் எந்த காலத்திலும் ஏற்கப் போவதில்லை என்று, நம் முதலமைச்சர் அவர்கள், சொல்லி உள்ளார்கள். அளவில்லாத அதிகாரத்தை, அடைய நினைத்த மோடிக்கு, இந்தத் தேர்தல் முடிவுகள், சரியான பாடம் புகட்டி இருக்கின்றன. இதற்கெல்லாம், நமது முதலமைச்சர் அவர்கள், முன்னின்று உருவாக்கிய, `இந்தியா கூட்டணி'தான் காரணம்.

நம் கூட்டணிக்கு `இந்தியா' என்று பெயர் வைத்த உடனே பயந்து விட்டார்கள். நம் நாட்டின் பெயரையே மாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். `இந்தியா' என்ற பெயரைத் தூக்கிவிட்டு `பாரதம்' என்று பெயர் வைத்தார்கள். `இந்தியா' என்று பேசக்கூடாத அளவிற்கு பயந்து போனார்கள்.

`மூன்றாவது அணி, அது எப்போதுமே கரை சேராது' என்று, தேர்தலுக்கு ஒரு வருடம் முன்பே, அதாவது மார்ச்-2023 அன்றே, நம் முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக, சரியாக எடுத்துக் கூறினார். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை, நம் தலைவர் அவர்கள், மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள். அவற்றைப் பற்றி நம் முதலமைச்சர் அவர்கள் இந்தப் புத்தகத்தில் மிகத்தெளிவாக எழுதியுள்ளார்கள்.

**முற்போக்கு முகங்கள்**

முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள், மக்களவை உறுப்பினர் அண்ணன் ரவிக்குமார் அவர்கள், பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், பொருளாதார அறிஞர் அமர்த்ய சென்னின் உரையாடல், யோகேந்திர யாதவ், முகமது ஜுபைர் என இந்தியாவின் ஒட்டுமொத்த முற்போக்கு முகங்களும், மதசார்பின்மைக் குரல்களும், இந்தப் புத்தகத்தில், 25 கட்டுரைகளைச் சிறப்பாக எழுதியுள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, பிரதமர் மோடி பற்றி எப்படிப்பட்ட பிம்பம் உருவாக்கப்பட்டது. உங்களுக்கே தெரியும். அவரை தோற்கடிக்கவே முடியாது என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் பா.ஜ.க கூட்டணி 400 இடங்களில் வெற்றிப் பெறுவோம் என்று சொன்னார்கள். பா.ஜ.க. மட்டும், தனியாகவே 300 இடங்களுக்கு மேல் வெற்றிப் பெறுவோம் என்று சொன்னார்கள். என்னென்னமோ கலர் கலரா, ரீல் விட்டார்கள்.

தமிழ்நாட்டில் நாங்கள் வெற்றி பெறாவிட்டாலும், வட இந்தியா முழுக்க, நாங்கதான் வெற்றிப்பெறப் போகிறோம் என்று சொன்னார்கள். பா.ஜ.க.வுக்கு, உத்தரப் பிரதேசம், ஒரு மாநிலம் போதும் என்று சொன்னார்கள்.

அதிலும், இந்த வடநாட்டு செய்தி சேனல்கள் இருக்கிறதே உங்களுக்கே தெரியும். என்னென்ன கலர் கலரா ரீல் விட்டார்கள் என்று. இந்தி சேனல்கள் மட்டுமல்ல,

ஆங்கில செய்தி சேனல்களும் சேர்ந்து ரீல் விட்டார்கள்.

சில சேனல்கள், தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பு என்று சொல்லி, பா.ஜ.க.வுக்கு 400க்கும் அதிகமான இடங்களைக் கொடுத்து வெற்றி உறுதி என்று சொல்லிவிட்டார்கள்.

**பல்வேறு உண்மைகள்**

இன்னும் சில சேனல்கள், ரொம்ப நடுநிலைமையோடு ஒரு 10 சீட்டு 15 சீட்டை குறைத்துவிட்டு, 385 சீட்டுகள்தான் வெற்றிப் பெறுவார்கள், 390 சீட்டுகள்தான் வெற்றிப் பெறுவார்கள் என்று பா.ஜ.க-க்கு முட்டுக் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால், ஆட்சி அமைப்பதற்குத் தேவையான, 272 இடங்களைக் கூட, அவர்களால் பிடிக்க முடியாத இடத்தில்தான் பா.ஜ.க.வை இந்திய மக்கள் வைத்தார்கள்.

இந்தத் தேர்தலில், பெரும்பாலான மெயின் ஸ்ட்ரீம் (Mainstream) ஊடகங்களை விட, துருவ் ராட்டி, முகம்மது சுபேர், மாதிரியான இண்டிபெண்டென்ட் யூட்யூபர்ஸ் (Independent Youtubers), ஃபேக்ட் செக்கர்ஸ் (Fact Checkers)ம், AltNews, பேரலை மாதிரியான இண்டிபெண்டென்ட் ஊடகங்கள் (Independent Youtubers)தான் பாசிஸ்ட்டுகளை எதிர்த்து, பல்வேறு உண்மைகளை, வெளிக் கொண்டு வந்து பேசினார்கள்.



பத்திரிகையாளர் நண்பர் இந்திரக்குமார் தேரடி - மில்டன் உள்ளிட்டோர் எல்லாம் பல மாநிலங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து, அங்குள்ள சூழல்களை, விரிவாகவே இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் பாராட்டுகள்.

யூட்யூப்பர்ஸ், பத்திரிக்கை நண்பர்கள் எப்படிப் பொறுப்பாகச் செயல்பட வேண்டும். அவர்களின் வார்த்தைகள், அவர்களின் நிகழ்ச்சிகள் எவ்வளவு பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதற்கு நண்பர், இந்திரகுமார் தேரடி அவர்களும், மில்டன் அவர்களும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள்.

இன்று காலை ஒரு ஆய்வுக் கூட்டத்தை முடித்துவிட்டு, வெளியில் வந்து என் ஃபோனில் யூட்யூப்பைத் திறந்து பார்த்தேன். திறந்து பார்த்தவுடன் நானே பயந்துவிட்டேன். என்ன தெரியுமா தம்நெயில் (Thumb Nail) `உதயநிதி துணை முதலமைச்சர் ஆகிறாரா, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஆவேசம்' நான் பயந்துவிட்டேன்.

**துணை முதலமைச்சர் அறிவிப்பு**

இன்னும் நான் துணை முதலமைச்சர் என்ற அறிவிப்பே வரவில்லை. அதற்கான முழு உரிமையும் முதலமைச்சரிடம்தான் இருக்கிறது. முதலமைச்சரி டம்தான் கேட்க வேண்டும். அவரிடமும் நீங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். ரோட்டில் போகின்றவர்கள்கிட்ட எல்லாம் மைக்கை நீட்டி, `உதயநிதி துணை முதலமைச்சர் ஆகப் போகிறாரா, உங்கள் கருத்து என்ன?' கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். என்னிடம் கேட்டீர்கள் சரி. அவர் பாவம், படப்பிடிப்பிற்காக விமான நிலையத்திற்குச் செல்கிறார். அவரைப் போய் வழிமறித்து அவரிடம் மைக்கை நீட்டி, அவர் சொல்லிவிட்டார், `என்னிடம் அரசியல் கேள்விகள் எல்லாம் கேட்காதீர்கள்' என்று சொல்லி விட்டு கிளம்பிவிட்டார். ஆனால், அவர்கள் வைத்திருக்கின்ற தலைப்பு என்ன. அதைப் படித்தால் என்னவென்று தோன்றும்.

உதயநிதி துணை முதலமைச்சர் ஆகிறாரா, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஆவேசம். இதற்கு என்ன தம்நெயில் வைக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. `உதயநிதி,சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு பதிலடி' என்று வைப்பார்கள்.

ஒரு மிஸ்டு கால் கொடுத்தாலே பா.ஜ.க-வில் சேரலாம் என்று விளம்பரம் செய்தார்கள். ஆனால், பாசிஸ்ட்டுகள், கடைசியில தன் சொந்தக்காலில் நிற்க முடியாமல், இன்றைக்கு சந்திரபாபு நாயுடு காலையும் மற்றும் நிதிஷ்குமாரின் காலையும் பிடித்துத்தான் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் புத்தகத்தில் பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு முக்கியமான கட்டுரையை எழுதியிருக்கிறார்கள். அதாவது பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து ஆதரித்த பல்வேறு கட்சிகளின் நிலைமை இன்றைக்கு என்ன ஆகியிருக்கிறது என்று திறனாய்வு செய்திருக்கிறார்.

மராட்டியத்தில் `சிவசேனா', காஷ்மீரில் `மக்கள் மாநாட்டு கட்சி (PDP)', ஒடிசாவில் `பிஜு ஜனதா தளம் (BJD)', இப்படிப் பல்வேறு கட்சிகளை பா.ஜ.க காலி பண்ணி இருக்கிறது. அப்படி பா.ஜ.க. காலி செய்த கட்சியில் முதல் இடத்தில் நிற்கும் கட்சி உங்களுக்கு எது என்று தெரியுமா, (அ.தி.மு.க) இப்படிப் பாவப்பட்ட நிலைக்கு நம் எதிர்கட்சி தள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் மீண்டு வர வேண்டும். அதுதான் என்னைப் போன்றோர்களின் ஆசை.

சங்கிகள் எல்லாம் எப்ப பார்த்தாலும், “எங்க மோடியைப் பார்த்து அமெரிக்காவே பயப்படுகிறது, எங்க மோடி பேசினார் என்றால், ஐரோப்பாவே நடுங்குகிறது, எங்கள் மோடியைப் பார்த்து அன்டார்டிகா உருகி போய்விட்டது இப்படியெல்லாம் உருட்டுவார்கள். ஆனால், இப்போது ஆந்திராவில் போய் கேட்டுப் பாருங்கள் ``யாரைப் பார்த்து மோடி பயப்புடுகிறார்” என்று, ஆந்திர மாநிலம் முழுக்க சொல்வார்கள் எங்க ``சந்திரபாபு நாயுடுவைப் பார்த்துத் தான் மோடி பயப்புடுவார்” என்று சொல்லுவாங்க.

இனிமேல் மோடியின் பிம்பத்தை பீகார் மக்கள் கூட நம்ப மாட்டார்கள்.

இந்திய வரலாற்றிலேயே ஒரு பிரதமரே, பிரச்சார களத்தில், மத ரீதியான வெறுப்புப் பேச்சுகளைப் பேசியது, இந்த முறைதான்.

ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா தொகுதிப் பிரச்சாரத்தில் இஸ்லாமியர்களைக் குறி வைத்துத் தாக்கி பேசுகிறார் மோடி அவர்கள். அந்தத் தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் படுதோல்வி அடைந்தார்.

தேர்தலுக்கான முக்கிய யுக்தியாக அயோத்தியில் ராமர் கோயில் கட்டினார்கள். ராமருக்கே அவர்கள் தான் பிராண்ட் அம்பாசிடர்கள் மாறி காட்டிக் கொண்டார்கள். ஆனால், அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதி மக்கள் பா.ஜ.க.வைப் புறக்கணித்தார்கள்.

பிரதமர் ரொம்ப நம்பிய வாரணாசியில், அவரால் மிகக் குறைந்த மார்ஜினில்தான் ஜெயிக்க முடிந்தது. அதுமட்டுமில்லை, போகிற இடம் முழுக்க, இந்தியா முழுக்க தமிழ்நாட்டுக்கு மட்டுமே தெரிந்த உதயநிதியை இந்தியா முழுக்க கொண்டுபோய் சேர்த்தது பிரதமர் மோடி அவர்கள்தான். ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் என்று எல்லா இடத்திலும் என்னைக் கொண்டு சேர்த்த பெருமை, மோடி அவர்களுக்கு உண்டு. ஆனாலும், வட நாட்டு மக்கள் பிரதமர் சுட்ட வடைகளுக்கு மயங்கவில்லை. வட இந்தியா முழுவதும் இந்த முறை மதவாதத்துக்கும் - வெறுப்புக்கும் - எதிராக மக்கள் வாக்களித்துள்ளார்கள்.

தென் இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு எப்போதுமே அப்படிதான் வாக்களித்து வருகிறது. அதனாலதான், பாஜக-வால் தமிழ்நாட்டில் கால் ஊன்ற முடியவில்லை. இந்த முறை தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிதி உரிமை மிகப்பெரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

‘நாம ஒரு ரூபாய் கொடுத்தால், வரியாக கட்டினால் நமக்கு வெறும் 28 பைசாதான் திருப்பித் தருகிறார்கள். என்று நான் எல்லா பிரச்சாரக் கூட்டத்திலும் பேசினேன். மோடி அவர்களை 28 பைசா என்று அழைத்தே பேசினேன். நிதி உரிமையை பா.ஜ.க அரசு பறிக்கிறது என்கிற உணர்வு தமிழ்நாடு முழுக்க இன்றைக்கு இருக்கிறது.

இன்னும் கல்விக்கான நிதி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். தேசிய கல்விக்கொள்கையை (National Educational Policy) நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் என்று சொல்கிறார்கள். `நீங்கள் இதை ஒப்புக்கொண்டால்தான் கல்விக்கான நிதியைக் கொடுப்போம்' என்று சொல்கிறார்கள்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் பேஸ்-2 வேலை நடந்துக்கொண்டு இருக்கிறது. இதுவரைக்கும் ஒரு பைசாக்கூட கொடுக்கவில்லை. முதலமைச்சர் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார். ஆனால், அதற்காக முதலமைச்சர் பணிகள் நிறுத்தி விடுவாரா என்று பார்த்தீர்கள் என்றால் இல்லை. மக்களுக்குத் தேவையான பணியை ஒன்றிய அரசு நிதி கொடுக்கிறதோ, இல்லையோ கவலைப்படாமல் பணிகள் நடந்துக் கொண்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வால் ஒரு இடத்தில்கூட வர முடியாமல் போனதற்குக் காரணம், மக்கள் அவர்கள் மீது வைத்திருக்கும் அந்த கோபம்தான்.

தமிழ்நாடு எப்போதும் பா.ஜ.க.வை ஏற்காது. அதைத்தான் இந்த தேர்தல் முடிவு காட்டுகிறது.

பா.ஜ.க-வின் அதிகார பலம், பண பலம், மீடியா பலம், பொய் செய்திகளின் தொழிற்சாலை (Fake news Factory) என எல்லாவற்றையும் தமிழ்நாட்டில் பயன்படுத்தி- பார்த்தார்கள். தமிழ்நாட்டில், புயல் அடித்தாலும், வெள்ளம் வந்தாலும் எட்டிக்கூடப் பார்க்காத மோடி அவர்கள், தேர்தல் அறிவிக்கப்பட்டதும் இரண்டு, மூன்று மாதத்தில் மட்டும் 8 முறை, தமிழ்நாட்டுக்கு மீண்டும் மீண்டும் வந்தார். மோடி மட்டும் வரவில்லை. பா.ஜ.க.வின் தேசியத் தலைவர்கள், ஒன்றிய அமைச்சர்கள், என அத்தனை பேரும், வந்தார்கள்.

கடைசி கட்டத் தேர்தல் பிரச்சாரம் முடிந்தும், யாரும், எந்த வகையிலும், பிரச்சாரம் செய்யக் கூடாது என்பதுதான், தேர்தல் விதிமுறை.

ஆனால், மோடி என்ன செய்தார். இங்கே கன்னியாகுமரிக்கு வந்து, தியானம் செய்கிறேன் என்று ஃபோட்டோ ஷூட் (Photo Shoot) நடத்தினார். சினிமாவில்கூட அத்தனை கேமரா வைத்து சூட் செய்ய மாட்டார்கள். மோடி தியானம் செஞ்சதை கிட்டத்தட்ட 9 கோணங்களில் ஷூட் பண்ணினார்கள். ஆனாலும், சங்கிகள் எதிர்பார்த்த அளவுக்கு வட நாட்டு மக்கள் ஏமாறவில்லை. தமிழ்நாட்டிலும் அவர்களின் நாடகம் எடுபடவில்லை.

தமிழ்நாட்டில் ரோடு ஷோ (Road Show) நடத்திய பா.ஜ.க-வை தமிழ்நாட்டு மக்கள், நடுரோட்டுல நிறுத்தினார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக 40க்கு 40 தொகுதிகளிலும் தி.மு.க.கூட்டணிக்கே வாக்களித்து, ஒரு க்ளீன் ஸ்வீப் (Clean Sweep) வெற்றியைக் கொடுத்தார்கள்.

மக்கள் கொடுத்த தெளிவான தீர்ப்பின் காரணமாகத்தான், இன்றைக்கு இந்தியாவில், மாநிலங்கள், உயிரோடு இருக்கின்றன. இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம், அப்படியே இருக்கிறது.

அதற்கு மாறாக, மோடி நினைத்தது போல தேர்தல் முடிவுகள் வந்திருந்தால், மாநிலங்களை எல்லாம் ஒரு முன்சிபாலிட்டி ஆக்கி இருப்பார்கள்.

இந்தக் கொடுமைகளெல்லாம் தடுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு, 2024 மக்களவைத் தேர்தல் முடிவுகள்தான் மிக, மிக முக்கியமான காரணம்.

இந்தியாவைக் காக்கின்ற பணியில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் முன்வரிசையில் இருக்கும்.

இந்த முறை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு, ஒரு பொய்யைச் சொன்னார்கள். அதாவது, தி.மு.க.அணிக்கு, போன தேர்தலை விட, வாக்கு சதவிகிதம் குறைந்து போய்விட்டது என்ற பிம்பத்தைக் கட்டினார்கள்.

தி.மு.க.வின் வாக்கு சதவிகிதம் குறைந்ததற்கான காரணங்களை, சகோதரர் சுகுணா திவாகர் அவர்கள், இந்தப் புத்தகத்தில் மிகத்தெளிவாக எழுதி இருக்கிறார்.

கடந்த மக்களவைத் தேர்தலில், தி.மு.கழகம் 24 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால், இந்த முறை போட்டியிட்டது 22 தொகுதிகளில் மட்டும்தான்.

அதுமட்டுமில்லை, வெற்றிவாய்ப்பு அதிகமுள்ள தொகுதிகளைக் கூட்டணி கட்சிகளுக்கு கொடுத்து விட்டு, எங்கு சவாலாக இருக்குமோ எங்கு நாம் போட்டிப்போட்டாலும் வெற்றிப்பெற முடியும் என்று அறிந்து கஷ்டமான இடங்களில் நாம் போட்டிப்போடுவோம் என்று எங்கள் தலைவர் அவர்கள் சவாலான தொகுதிகளை கழகம் எடுத்துக்கொண்டது.

எதிராளிகளின் வீழ்ச்சியையும் - தோழமைக் கட்சிகளின் வெற்றியையும், உறுதி செய்யும் வகையில், நம் முதலமைச்சர் அவர்கள், இப்படி இடங்களை ஒதுக்கினார்கள். இது நம் முதலமைச்சர் அவர்களின் தேர்தல் வியூகம் - சாதுர்யம்.

இதையெல்லாம் கணக்கில் கொண்டுதான் தி.மு.கவின் வாக்குச் சதவிகிதத்தை அணுக வேண்டும். யார் என்ன சொன்னாலும், கழகத்தின் வலிமை பெருகிக் கொண்டே போகிறது என்பது தான் உண்மை.

எங்கள் முதலமைச்சர் உருவாக்கியுள்ள கூட்டணி, வெற்றிக் கூட்டணி. 2026-லும் இந்தக் கூட்டணி, மாபெரும் வெற்றியை பெறும். அதற்கு ஜனநாயக சக்திகளாகிய நீங்களும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு இப்போதே நீங்கள் எல்லாம் தயாராக வேண்டும்.

இந்தப் புத்தகத்தில் 2024 தேர்தலைப்பற்றி 25 கட்டுரைகள் வந்திருக்கின்றன. 2026 தேர்தலில் வெற்றிப்பெற்று 50 கட்டுரைகள் கொண்ட ஒரு புத்தகத்தை நீங்கள் வெளியிட வேண்டும். அதற்கும் என்னை அழைக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு, இந்தச் சிறப்புக்குரிய புத்தகத்தை வெளியிட்டுள்ள ஆழி பதிப்பகத்துக்கு மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ், மூத்த பத்திரிக்கையாளர்கள் ஏ.எஸ்.பன்னீர்செல்வம், விஜயசங்கர் ராமச்சந்திரன், ஜென்ராம், திருஞானம், அரசியல் செயல்பாட்டாளர் தீஸ்தா செதல்வாட், பதிப்பாளர் ஆழி செந்தில்நாதன், நூல் தொகுப்பாசிரியர் அருண் பிரசாத், இந்திரகுமார் தேரடி, மில்டன், அயர்ன் கார்த்திகேயன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஏழுமலை, நந்தனம் மதி, முரளி, ராஜா அன்பழகன், அக்கறைப் பேட்டை மனோகரன், உமாசங்கர், தினேஷ் உள்ளிட்ட கழக முன்னணியினர் மற்றும் சுகுணா திவாகர், இளங்கோ உள்பட பலரும் கலந்து கொண்டனர்.





சென்னை, தி.நகர், சர் பிட்டி தியாகராயர் அரங்கத்தில், `தேர்தல்-2024, மீளும் ‘மக்கள்’ ஆட்சி’ நூல் வெளியீட்டு விழா 20ந் தேதி நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு நூலை வெளியிட்டார். உடன் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ், மூத்த பத்திரிக்கையாளர்கள் ஏ.எஸ்.பன்னீர்செல்வம், விஜயசங்கர் ராமச்சந்திரன், ஜென்ராம், திருஞானம், அரசியல் செயல்பாட்டாளர் தீஸ்தா செதல்வாட், பதிப்பாளர் ஆழி செந்தில்நாதன், நூல் தொகுப்பாசிரியர் அருண் பிரசாத், இந்திரகுமார் தேரடி, மில்டன், அயர்ன் கார்த்திகேயன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஏழுமலை, நந்தனம் மதி, முரளி, ராஜா அன்பழகன், அக்கறைப்பேட்டை மனோகரன், உமாசங்கர், தினேஷ் உள்ளிட்ட கழக முன்னணியினர் மற்றும் சுகுணா திவாகர், இளங்கோ உள்பட பலரும் கலந்து கொண்டனர்.